**செய்தி வெளியீடு எண்: 723** **நாள்: 10.10.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.10.2018) தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சென்னை, மாதவரத்தில் 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாதவரம் புறநகர் பேருந்து நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்பேடு, உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 21 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தானிய கிடங்கு மற்றும் வணிக வளாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், சென்னையிலிருந்து வடக்கே உள்ள திருவள்ளூர், திருப்பதி, காளஹஸ்தி, நெல்லூர் போன்ற ஊர்களுக்கு செல்லும் பேருந்துகளுக்கென மாதவரத்தில், கல்கத்தா தேசிய நெடுஞ்சாலை மற்றும் உள்வட்ட சாலை சந்திப்பில், 8 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட 2011–12ஆம் ஆண்டு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, மாதவரத்தில் 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட மாதவரம் புறநகர் பேருந்து நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த புதிய பேருந்து நிலையம், அடித்தளம், தரைத்தளம் மற்றும் மேல்தளம் ஆகியவற்றை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளது. பேருந்து நிலையக் கட்டடத்தின் அடித்தளத்தில் பயணிகள் வசதிக்காக 1700 இருசக்கர வாகனங்கள் மற்றும் நிலையக் கட்டடத்தின் முன்பகுதியில் 72 சீருந்துகள் நிறுத்துவதற்கான இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேருந்து நிலையக் கட்டடத்தின் தரைத்தளத்தில் பயணிகள் காத்திருப்பு இருக்கைகள், பொது கழிவறைகள், பயணச்சீட்டு வழங்கும் இடங்கள், தாய்மார்களுக்கான பாலூட்டும் தனி அறை, உணவகம், மற்றும் ஏ.டி.எம். போன்ற வசதிகளும், மேல்தளத்தில் அவசர சிகிச்சை அளிக்க மருத்துவ வசதி, பயணிகளுக்கான

ஓய்வு அறை, ஓட்டுநர் / நடத்துனர்களுக்கான ஓய்வு அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்பேருந்து நிலையத்தில், ஒரே நேரத்தில் தரை தளத்திலிருந்து 42 பேருந்துகள் இயக்கும் வண்ணம், 2 நடைமேடைகளில் பேருந்து நிறுத்த பாந்துகள், 48 இயங்கா பேருந்துகள் நிறுத்தி வைக்க மேல்தளத்தில் போதிய இடவசதியும் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி, தீயணைப்பு வசதி மற்றும் உயர்ந்த மின்விளக்கு கம்பங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதனால் குறிப்பாக வடசென்னைப் பகுதி பொதுமக்கள் பெரிதும் பயனடைவர்.

உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகம், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்த உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகத்தினுள், வணிகர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தானிய கிடங்கு மற்றும் வணிகக் கட்டடம் அமைக்கப்படும் என்று 2014–15ஆம் ஆண்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டது. அதன்படி, கோயம்பேடு, உணவு தானிய மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில், ஒரு தாழ்தளம், தரைதளம் மற்றும் இரண்டு மேல்தளங்களுடன், மொத்தம் 65,313 சதுர அடி கட்டட பரப்பளவில், 21 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கடைகளுடன் கூடிய தானிய கிடங்கு மற்றும் வணிக வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 34 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, அவர்களது கல்வித் தகுதி மற்றும் பதிவு மூப்பு அடிப்படையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஓட்டுநர் ஆகிய பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் / முதன்மைச் செயலாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஆனந்த்ராவ் விஷ்ணு பாட்டில், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.10.2018**